# முதலாம் தவணைப் பரீட்சை - 2018

## சைவநெறி

275

தரம் – 06 நேரம்:– 3மணி

### பகுதி - I

**மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. ஓம் என்ற பிரணவ மந்திரப் பொருளாய் விளங்குபவர்?
    1) அம்பாள் 2) சிவபெருமான் 3) வைரவர் 4) விநாயகர்

02. வெற்றி வேற்கை என்னும் நூலை இயற்றியவர்?
    1) அதிவீரராம பாண்டியன் 2) ஒளவையார்
    3) திருவள்ளுவர் 4) கபிலதேவநாயனார்

03. உணவு உண்ண தொடங்கு முன் பாடப்படும் தேவாரம்?
    1) "பூவினுக்கருங்கலம்..........." 2) " அன்னம் பாலிக்கும்....."
    3) " மந்திரமாவது நீறு ....." 4) "பாலுக்குப் பாலகன் ...."

04. "அறஞ் செய்ய விரும்பு" எனக் கூறியவர்?
    1) ஒளவையார் 2) கம்பர் 3) வியாசர் 4) திருவள்ளுவர்

05. "தோப்புக்கரணம்" போடும் கதையுடன் தொடர்புபட்டவர்?
    1) அகத்தியர் 2) கஜமுகாசுரன் 3) சிங்கமுகன் 4) நரகாசுரன்

06. தேவர்களின் அரசன்?
    1) தேவேந்திரன் 2) சிபிச்சக்கரவர்த்தி 3) மனுநீதி கண்ட சோழன் 4) கோவலன்

07. "கர்ண வேதனம்" என அழைக்கப்படும் சடங்கு?
    1) பெயர் சூட்டுதல் 2) ஏடு தொடக்குதல் 3) காது குத்துதல் 4) சோறூட்டல்

08. பஞ்சபுராணம் பாடும்போது நான்காவதாக ஓதப்படுவது?
    1) தேவாரம் 2) திருவிசைப்பா 3) பெரியபுராணம் 4) திருப்பல்லாண்டு

09. இறைவன் உறைந்திருக்கும் இடம்?
    1) வீடு 2) கோயில் 3) பாடசாலை 4) சமயநிறுவனங்கள்

10. சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் முகமாகக் கொண்டாடப்படும் பண்டிகை?
    1) தைப்பொங்கல் 2) புதுவருடப்பிறப்பு 3) தீபாவளி 4) ஆடிப்பிறப்பு

11. "அறம் செய்ய விரும்பு" என்பதை வலியுறுத்தும் நூல்?
    1) ஆத்திசூடி 2) கொன்றைவேந்தன் 3) மூதுரை 4) நல்வழி

12. பகிர்ந்துண்ணலுடன் தொடர்புடைய பண்டிகை?
    1) சிவராத்திரி 2) சித்திரைவருடப்பிறப்பு 3) மாசிமகம் 4) திருவாதிரை



Scanned by CamScanner

13. சிவனுக்குரிய விரதம்?
1) கேதாரகௌரி விரதம் 2) நவராத்திரி
3) வரலட்சுமி 4) திருக்கார்த்திகை

14. விழுமியப்பண்புகளில் ஒன்றாக அமைவது?
1) புகழ்ச்சி 2) பேராசை 3) பெருமை 4) உண்மை பேசுதல்

15. வீட்டில் நாம் அன்றாடம் கடைப்பிடிக்கும் சைவப்பழக்கம் அல்லாதது?
1) கடவுளை வணங்குதல் 2) திருநீறு அணிதல்
3) பஞ்சபுராணம் ஓதுதல் 4) உணவு உண்ணல்

16. எண்ணெய் வைத்து நீராடும் பண்டிகை?
1) தீபாவளி 2) சித்திரை வருடப்பிறப்பு 3) தைப்பொங்கல் 4) ஆடிப்பிறப்பு

17. "மெய்ம்மை" என்னும் நூலை எழுதிய சமயப் பெரியார்?
1) ஆண்டார் 2) ஆறுமுகநாவலர் 3) பாண்டியர் 4) செந்தில்நாதர்

18. நரகாசுரனை அழித்த பண்டிகை?
1) தீபாவளி 2) மகரசங்கிராந்தி 3) ஓணம்பண்டிகை 4) புதுவருடம்

19. திருநீறு அணியும் போது சொல்ல வேண்டியது?
1) நமசிவாய 2) சிவாயநம 3) சிவசிவ 4) திருச்சிற்றம்பலம்

20. "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" எனக் கூறும் நூல்?
1) நல்வழி 2) மூதுரை 3) ஆத்திசூடி 4) திருக்குறள்

(20x2 =40 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**01.**

பின்வரும் தேவாரப்பாடல்கள் இரண்டினையும் பிழையின்றி எழுதி, அவற்றைப் பாடியவர் பெயர்களையும் எழுதுக?

1) "இடரினுந் தளரினும்..........."
2) " ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே....."
3) "பித்தா பிறை சூடி.........."

(8+2 x 2 =20 புள்ளிகள்)

**02.**

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்"

1) விநாயகர் விக்னேஸ்வரர் என அழைக்கப்படக்காரணம் யாது?
2) விநாயகருக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் 4 தருக?
3) விநாயகர் வழிபாடு நடைபெறும் இடங்கள் 5 தருக?
4) விநாயகரை வழிபடுவதால் கிடைக்கும் பயன்கள் நான்கினைத் தருக?

(2+2+3+3+=10 புள்ளிகள்)



Scanned by CamScanner

## 03.

"விரதங்களையும், பண்டிகைகளையும் பண்புடன் கொண்டாடுவோம்"

1) விரதம் என்பதற்கு ஆறுமுகநாவலர் கூறும் கருத்தினை எழுதுக?
2) விநாயக விரதங்கள் இரண்டு கந்த விரதங்கள் இரண்டு எழுதுக?
3) பண்டிகைகள் நான்கு தருக?
4) பண்டிகை மூலம் கடைப்பிடிக்கும் விழுமியப்பண்புகள் 4 தருக?

(2+2+3+3=10 புள்ளிகள்)

## 04.

"விழுமியப் பண்புகைப் பேணி வாழ்வில் உயர்வோம்"

1) நீங்கள் அன்றாடம் கடைப்பிடிக்கும் சமயப் பழக்கவழக்கங்கள் நான்கு தருக?
2) விழுமியப் பண்புகள் 4 தருக?
3) "திருச்சிற்றம்பலம்" சொல்லும் சந்தர்ப்பத்தை கூறுக?
4) பெரியோர் முன் செய்யத்தக்க செயல்கள் ஐந்து தருக?

(2+2+3+3=10 புள்ளிகள்)

## 05.

"வாழ்வியல் சடங்குகளை விருப்புடன் பேணுவோம்"

1) வாழ்வியல் சடங்குகள் 4 தருக?
2) வாழ்வியற் சடங்குகளை மேற்கொள்வதன் நோக்கம் யாது?
3) ஏடு தொடக்குதல், சடங்கிற்கு வழங்கப்படும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக?
4) சோறூட்டும் சடங்கின் முக்கிய நோக்கம் யாது?

(2+2+3+3=10 புள்ளிகள்)

## 06.

"தர்மம் தலைகாக்கும்" என்பது முதுமொழி.

1) மகாபாரத கதையில் கூறப்பட்ட விழுமியப்பண்புகள் இரண்டு தருக?
2) தர்மபுத்திரன் செய்த யாகத்தின் பெயரை குறிப்பிடுக?
3) கீரியின் உடம்பில் நிகழ்ந்த மாற்றம் யாது?
4) உஞ்சவிருத்தி பிராமணர் கதை கூறும் உண்மை யாது?

(2+2+3+3=10 புள்ளிகள்)

## 07.

பின்வருவனவற்றுள் இரண்டு பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

1) விநாயகர்
2) விழுமியப் பண்புகள்
3) பெரியோரைக் கனம் பண்ணுதல்
4) சித்திரை வருடப்பிறப்பு

(5x2=10 புள்ளிகள்)



Scanned by CamScanner